TNTS0E0006562015



**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செங்கோட்டை**
**முன்னிலை திரு.எஸ்.இளையராஜா, எம்.எல்.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், செங்கோட்டை
2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10 ம் நாள் புதன்கிழமை
பல்வகை மனு எண்.18/2025 ல் உள்ள
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.275/2015
CNR.No.TNTS0E0006562015

உமாசங்கர் மற்றும் 5 நபர்கள். ...மனுதாரர்கள்/எதிரிகள்

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர்,
அனைத்து மகளிர் காவல் நிலையம்,
தென்காசி. ...எதிர்மனுதார்/புகார்தாரர்

இம்மனுவானது என் முன்பு இறுதியான விசாரணைக்கு 26.08.2025 அன்று வந்தபோது மனுதாரர்கள்/எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.இரா.சாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை.I அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு மனு, பதிலுரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 யை இந்நீதிமன்றத்தில் மீண்டும் அழைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு BNSS பிரிவு 348 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுவின் சுருக்கம்</u>** :-

மனுதாரர்கள்/எதிரிகள் மீது இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகவும், இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளாக அ.சா.1 ஈஸ்வரியை

26.05.2025 அன்று இந்நீதிமன்றத்தில் முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ளதாகவும், மேற்படி எதிரிகளின் மீதுள்ள வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளை விசாரித்த அன்று போதுமான வழக்கு கோப்பு மற்றும் ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் அரசு தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய முடியவில்லை. அரசு தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யாதது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் இந்நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணைக்காக மீண்டும் ஆஜராகும் பொருட்டு எதிரிகள் தரப்பில் அதற்கான படி பணம் கொடுக்க தயாராக உள்ளதாகவும், எனவே இவ்வழக்கின் எதிரிகள் தரப்பில் மேற்படி அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 யை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளித்திட வேண்டியுள்ளார்கள்.

<u>3. அரசு தரப்பு பதிலுரையின் சுருக்கம்</u> :–

மனுதாரர்கள்/எதிரிகள் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், எதிர்மனுதாரர் ஒப்புக் கொண்டதைத் தவிர பிற சங்கதிகளை மறுப்பதாகவும், உண்மையில், 26.05.2025 ம் தேதியில் அ.சா.1 முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ளார். மனுதாரர்கள்/எதிரிகள் அன்றையதினம் அ.சா.1 யை குறுக்கு விசாரணை செய்யவில்லை. வழக்கை நீட்டிப்பதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/எதிரிகள், அரசு தரப்பு சாட்சிகளை மறுவிசாரணை செய்வதற்கு மனுவில் எந்தவிதமான நியாயமான தகுந்த காரணங்களும் குறிப்பிடப்படவில்லை என்றும், மனுதாரர்கள்/எதிரிகள், அரசு தரப்பு சாட்சிகளை மிரட்டுவதற்கு வாய்ப்புள்ளதாகவும், மனு அனுமதிக்கப்பட்டால் அரசு தரப்பிற்கு இழப்பு ஏற்படும் என்றும், மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றம் Vinod kumar – Vs– State of

Punjab reported in 2015(1) Scale 542 என்ற வழக்கிலும், மேலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற R.O.C.No.7808-A/2015/F1/ReGR(Judl) என்ற Circular-லிலும் சாட்சிகளை கலைக்கக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. மேலும் மாண்பமை உச்சநீதிமன்றம் A.G. –VS– Sivakumar yadav 2015 SCC online SC 799 என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளது. The power under section 311 of Cr.P.C must therefore be invoked by the Court only in order to meet the ends of justice for strong and valid reason and the same must be exercised with care and caution and circumspectious.

எனவே மனுதாரர்கள்/எதிரிகள் தாக்கல் செய்துள்ள BNSS பிரிவு 348 ன் கீழான மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டி பதிலுரை தாக்கல் செய்துள்ளார்.

**பிரச்சனைக்குரிய தீர்வு.**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா, இல்லையா என்பதே ஆகும்.

4. மனுதாரர்கள்/எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவுகள் 494, 294(பி), 498 அ, 109, 506(1) ஆகிய பிரிவுகளின் கீழ் இந்த வழக்கானது பதிவு செய்யப்பட்டு, நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரர்கள்/எதிரிகள் மேற்படி வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளாக அ.சா.1 இவ்வழக்கின் புகார்தாரரான ஈஸ்வரி 26.05.2025 ம் தேதி இந்நீதிமன்றத்தில் முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் முதல் விசாரணை செய்யப்பட்ட தேதியன்று எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் வழக்கு கோப்பு மற்றும் ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 யை அன்றைய தினமே குறுக்கு விசாரணை செய்ய முடியவில்லை என்றும், மேற்படி அரசு தரப்பு சாட்சி இந்நீதிமன்றத்தில் குறுக்கு

விசாரணைக்காக மீண்டும் ஆஜராகும் பொருட்டு எதிரிகள் தரப்பில் அதற்கான படி பணம் கொடுக்க தயாராக உள்ளதாகவும், எனவே இவ்வழக்கின் எதிரிகள் தரப்பில் மேற்படி அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 யை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளித்திட வேண்டியுள்ளார்.

5. அதேவேளையில், அரசு தரப்பில், 26.05.2025 அன்று அ.சா.1 முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ளார். மனுதாரர்கள்/எதிரிகள் அன்றையதினம் அ.சா.1 யை குறுக்கு விசாரணை செய்யவில்லை. வழக்கை நீட்டிப்பதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/எதிரிகள், அரசு தரப்பு சாட்சிகளை மறுவிசாரணை செய்வதற்கு மனுவில் எந்தவிதமான நியாயமான தகுந்த காரணங்களும் குறிப்பிடப்படவில்லை என்றும், மனுதாரர்கள்/எதிரிகள், அரசு தரப்பு சாட்சிகளை மிரட்டுவதற்கு வாய்ப்புள்ளதாகவும், மனு அனுமதிக்கப்பட்டால் அரசு தரப்பிற்கு இழப்பு ஏற்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

6. இரு தரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள்/எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவுகள் 494, 294(பி), 498 அ, 109, 506(1) ஆகிய பிரிவுகளின் கீழ் இந்த வழக்கானது பதிவு செய்யப்பட்டு, நிலுவையில் இருந்து வருகிறது என்பது தெளிவாகிறது. மேலும் அ.சா.1 புகார்தாரர் ஈஸ்வரி கடந்த 26.05.2025 ம் தேதி இந்நீதிமன்றத்தில் முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அன்றையதினம் அவர்கள் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. அதற்கான காரணம், வழக்கு கோப்பு மற்றும் ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் அரசு தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய முடியவில்லை என்பது

ஏற்கத்தக்க காரணமாக இல்லாமல் இருந்தாலும், அ.சா.1 முக்கியமான சாட்சி ஆவார். அவரை குறுக்கு விசாரணை செய்தால்தான், வழக்கின் உண்மை தன்மை வெளிக்கொண்டு வரமுடியும். அதனால் நீதியின் நலனை கருத்தில் கொண்டும், குற்றம் சாட்டப்பட்டவருக்கு அ.சா.1 யை குறுக்கு விசாரணை செய்வதற்கு வாய்ப்பு அளிக்காததால் நீதிப்பிழை குறைபாடு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு இந்த மனுவை கீழ்க்கண்ட நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**7. இறுதியாக,**

மனுதாரர்கள்/குற்றம் சாட்டப்பட்டவர்கள் தென்காசி சமரச மையத்தில் (Mediation Center, Tenkasi) வருகிற 23.09.2025 ம் தேதிக்குள் ரூ.2,000/-த்தை செலுத்தும் பட்சத்தில் மனு அனுமதிக்கப்படும் என்றும், மேற்படி தேதிக்குள் மேற்படி பணத்தை செலுத்தாத பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, 2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.09.10 14:42:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், செங்கோட்டை.